2006 ஆகஸ்ட் 8]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தியா முழுக்க பெப்சி, கோகா–கோலா போன்ற குளிர் பானங்கள் தடை செய்யப்பட வேண்டுமென்ற ஒரு வேண்டுகோள் இருந்து வந்து கொண்டிருக்கிறது. பல மாநிலங்களிலே பொதுவாக குஜராத், இராஜஸ்தான், சட்டீஸ்கர், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களிலே அவை தடை செய்யப்பட்டிருக்கின்றன. நச்சுப் பொருளை அதிகமாகக் கொண்டிருக்கின்ற இந்த கோகா–கோலா, பெப்சிக்கு தமிழகத்திலும் நம்முடைய முதல்வர் அவர்கள், தடையைக் கொண்டு வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை கொண்டுவருவதில் எந்தத் தடையுமில்லை. ஆனால் ஒன்று, இங்கே தடை செய்து, பாண்டிச்சேரியில் விற்றால் என்ன செய்வது? இங்கே தடை செய்து வேறு மாநிலத்திலே விற்றால் என்ன செய்வது? ஆகவே, ஏக இந்தியாவை சிந்திக்கின்ற நாம், ஏக இந்திய அளவில் இந்தத் தடை வருமேயானால், அதை ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கரூர் தொகுதியில் மணல் எடுப்பதற்கு மக்கள் எதிர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதியில், இன்று கரூர் தாலுக்கா அலுவலகம் முன்பு, 5 ஊராட்சிகளுக்குட்பட்ட பொதுமக்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை நிலவுகிறது. காரணம் கரூர் சட்டமன்றத் தொகுதியிலே, ஆண்டாள் கோவில் மேல்பாகம் ஊராட்சி, ஆண்டாள் கோவில் கீழ்பாகம் ஊராட்சி, கருப்பம்பாளையம் ஊராட்சி, அப்பிபாளையம் ஊராட்சி, விசுவநாதபுரம் ஊராட்சி ஆகிய 5 ஊராட்சிகளுக்குட்பட்ட 12 கிணறுகள் அமைந்துள்ள இடங்களிலும், விவசாயத்திற்கு நீர் எடுத்துச் செல்லப்படும் கிணறுகள் அமைந்துள்ள இடங்களிலும் பொதுப் பணித் துறைமூலம் அரசு மணல் எடுத்து வருகிறது. இவ்வாறு மணல் எடுப்பதைத் தடைசெய்ய வேண்டுமென்று ஐந்து ஊராட்சி மன்றங்களாலும் தீர்மானம் இயற்றப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதும், மணல் எடுப்பதைத் தமிழக அரசு நிறுத்தவில்லை. அந்தப் பரபரப்பான

சூழ்நிலையில் இன்று கரூர் தாலுகா அலுவலகம் முன்பே ஐந்து ஊராட்சிகளைச் சேர்ந்த பொது மக்களும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இத்தகைய பதற்றத்தைத் தணிக்க தமிழக அரசு மணல் எடுப்பதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்கே இருக்கிற சூழ்நிலைகளுக்கேற்ப மணலை அள்ளிக்கொள்வதற்காக புதிய குவாரிகளைத் திறப்பதற்கான அனுமதியை இந்த அரசு வழங்கி இருக்கிறது. பொதுமக்கள் பல்வேறு இடங்களிலும் ஆங்காங்கே இதுபோன்ற எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். எதிர்ப்பை, மக்களைவிட அங்கே இருக்கிற சில தனிப்பட்டவர்களும் சேர்ந்து செய்கிறார்கள் என்கிற செய்தியும் (மேசையைத் தட்டும் ஒலி) அரசாங்கத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதுபற்றி தீர விசாரித்து, நிச்சயமாக இந்த அரசு உரிய முடிவை எடுக்கும்.

திரு. வே. செந்தில் பாலாஜி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் முன்னனுமதி எதுவும் வாங்கவில்லை. என்னிடம் எழுதியும் கொடுக்கவில்லை. உட்காருங்கள்.

3. கவன ஈர்ப்பு

சீர்காழி தொகுதி, பனங்காட்டாங்குடி ராஜாத்தி அண்ணி நடுநிலைப் பள்ளியை அரசு எடுத்து நடத்தக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. எம். பன்னீர்செல்வம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எம் பன்னீர்செல்வம்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS